**தலைப்பு 261 - மாவட்ட செயலகம், காலி**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

**1.1 மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்**

(அ) தேசிய மற்றும் மாவட்ட மட்டத்தில் கலாசார, சமய மற்றும் பிற காலரீதியான அரசாங்க விழாக்களை ஏற்பாடு செய்யும் தலைவராகச் செயற்படுதல்

(ஆ) சகல தேர்தல் நடவடிக்கைகளிலும் அதாவது சனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின்போது தேர்தல் ஆணையாளரது பிரதிநிதியாக மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தராகப் பணியாற்றி நியாயமானதும் பாரபட்சமற்றதுமான தேர்தல்கள் நடைபெறுவதற்கு உதவியளித்தல்

(இ) மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட அபிவிருத்திக் குழுச் செயலாளராகப் பணியாற்றி மாவட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடுதல், அமுலாக்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

(ஈ) மாவட்டத்தின் 19 பிரதேச செயளாளர்களுடனும் மாவட்ட நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தலைவராகப் பணியாற்றுதல்.

(உ) பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்கள், தொடர்பாக வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொருட்டு அவர்களது வருவாயைச் சேகரித்தல், கணக்கிலிடுதல், திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் மற்றும் குறித்த வருவாய்க் கணக்கீட்டு உத்தியோகத்தர்களை அறிவூட்டல்

(ஊ) மாவட்ட அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் சகல அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களது பிரதிப் பிரதிநிதியாக பணியாற்றி அந்தந்த திணைக்களங்களின் குறிக்கோள், நோக்கம் மற்றும் பணிகள் நிறைவேறுமாறு ஒருங்கிணைந்து செயலாற்றல்

(எ) வறட்சி, வெள்ளம், புயல், கடல் கொந்தளிப்பு போன்ற இடர்களின் போது அரசாங்கத்தின் பிரதிநிதியாகப் பணியாற்றி இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல், அமுலாக்கல், மேற்பார்வைசெய்தல் மற்றும் பின்தொடர்

நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வாயிலாக மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருதலும் நிலைபெறச் செய்தலும்

(ஏ) மாவட்டத்தினுள் காணி உறுதி, பிறப்பு, இறப்பு மற்றும் திருமணம் ஆகியவற்றை பதிவுசெய்யும் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.

(ஒ) மாவட்டத்தினுள் ஓய்வூதிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

## 1.2 மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

---------------------------------------------------------------------------------------

(அ) காலி கடவத்சர

(ஆ) தவலம

(இ) நியாகம

(ஈ) அம்பலாங்கொடை

(உ) கரந்தெனிய

(ஊ) எல்பிட்டிய

(எ) நெலுவ

(ஏ) நாகொடை

(ஐ) பலப்பிட்டிய

(ஒ) ஹிக்கடுவ

(ஓ) அக்மீமன

(ஔ) பெந்தோட்டை

(க) ஹபராதுவ

(கா) பத்தேகம

(கி) யக்கலமுல்ல

(கீ) போப்பே போத்தல

(கு) வெலிவிட்டிய

(கூ) இமதூவ

(கெ) கோனபினுவல

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

---------------------------------------------

காலி மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக்

குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 செப்தெம்பர் 30 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை மேற்கொள்ளக்கூடியவகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

## 1.4 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.6 இலிருந்து 1.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) ஒதுக்கீட்டுக்கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

மாவட்ட செயலகத்திற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 1,075,740,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 1,067,663,790 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 8,076,210 அல்லது 0.75 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | சேமிப்பு தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 1,014,980,000 | 1,007,601,904 | 7,378,096 | 0.73 |
| மூலதனம் | 60,760,000 | 60,061,886 | 698,114 | 1.15 |
| **மொத்தம்** | **1,075,740,000** | **1,067,663,790** | **8,076,210** | **0.75** |

**(ii) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக 27 அமைச்சுக்களிடமிருந்தும் 19 திணைக்களங் களிடமிருந்தும் ரூபா 4,132,882,906 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு கிடைத்திருந்ததுடன் அந்த நிதி ஏற்பாட்டிலிருந்து முறையே ரூபா 2,021,857,923 மற்றும் ரூபா 1,935,112,682 என்ற வகையில் ரூபா 3,956,970,605 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் படி மீளாய்வாண்டின் இறுதியளிவில் முறையே ரூபா 164,268,120 மற்றும் ரூபா 13,721,192 என்ற வகையில் ரூபா 177,989,312 கூட்டுத்தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு வழங்கிய நிதியேற்பாட்டில் முறையே 1 சதவீதத்திற்கும் 23 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

யக்கலமுல்ல பிரதேச செயலகத்தின் ஆரம்ப பாடசாலைகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காலி/வத்தஹேன கனிஷ்ட வித்தியாலயத்தினை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 653,793 மதிப்பீடுடொன்று தயாரிக்கப்பட்டு 2013 ஆகஸ்ட் மாதமளவில் ரூபா 450,000 ஒப்பந்த சங்கமான பாடசாலை அபிவிருத்தி சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- விளையாட்டு முற்றத்தினை அமைப்பதற்காக மேலேறி கீழிறங்கும் பிரமீட் ஒன்றை தயாரித்தல், (ஜீ.ஐ. குளாய்களை பயன்படுத்தி) சீஸோ ஒன்றை தயாரித்தல் மற்றும் பெயர்ப் பலகை ஒன்றை பொருத்துதல் என்பவற்றிற்காக விலை பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்காக தென் மாகாண பிரதி பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தின் தொடர்புடைய உத்தியோகத்தர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மேலேறி கீழிறங்கும் பிரமீட் இற்காக 6'' அங்குல 80 துண்டு ¾ கல்வனைஸ் குளாய்கள் பயன்படுத்துதல் வேண்டுமென விலை பகுப்பாய்வில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த அளவுடைய 48 துண்டுகள் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, இந்த விலை பகுப்பாய்வில் தயாரிக்கப்பட்டிருந்த வீதத்திற்கும் கொடுப்பனவுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்பட்டன.

- 17 ஆம் இலக்க விடயத்தின் கீழ் சீஸோ ஒன்றை தயாரித்து பொருத்துவதற்காக ரூபா 24,790 செலுத்தப்பட்டிருந்த போதிலும், விலை பகுப்பாய்வு விவரக் குறிப்புக்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 1 1/2' – 1/9' அங்குல கல்வனைஸ் குளாய்க்குப் பதிலாக 1 1/2', 1/8' 7'' அங்குலமே காணப்பட்டதுடன் 1 1/2' – 2/12' அங்குலத்தில் காணப்பட வேண்டிய குளாய்க்குப் பதிலாக 1 1/2', 2/8' 10'' அங்குலமே காணப்பட்டது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்டச் செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளபடி யானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானவை | உச்ச எல்லை | உள்ளபடி யானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 26101 | 52,000,000 | 51,469,721 | 46,000,000 | 49,087,466 | 223,000,000 | 198,076,101 |

26101 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்குகள் தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியிலுள்ளவாறு அறவிடுதல் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,014,584 கூட்டுத்தொகையாக காணப்பட்டது.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

மாவட்டச் செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 194,086 ஆகும். 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் மாவட்டச் செயலகம் இந்த மீதியினை தீர்வுசெய்திருக்கவில்லை. அது 2006 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்படுகின்றது.

**(இ) பொது வைப்புக்கள் கணக்கு**

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்டச் செயலகத்தின் 6003/0000/00/037/0000/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கிலுள்ள மீதி ரூபா 276,207,075 ஆக இருந்தது. அதில் காணப்பட்ட ரூபா 1,054,125 வைப்புக்கள் 02 ஆண்டுகளிற்கும் மேலாக காணப்பட்டு வந்திருந்ததுடன் அது தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

நிதிப்பிரமாணம் 880, பிணைகள் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயம் மற்றும் 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய 1/99 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள 15 பிரதேச செயலகங்களிலுள்ள 47 உத்தியோகத்தர்களினால் ரூபா 402,500 கூட்டுத்தொகையான பிணைப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.7 நட்டங்களும் சேதங்களும்

காலி மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமாக காலியில் அமைந்துள்ள அரசாங்க இல்லத்திற்கு 2013 யூன் 08 ஆந் திகதி காற்றினால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.8 மனிதவள முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 65 | 60 | 05 |
| மூன்றாம் நிலை | 43 | 27 | 16 |
| இரண்டாம் நிலை | 1,481 | 1,184 | 297 |
| ஆரம்ப நிலை | 175 | 162 | 13 |
| மொத்தம் | 1,764 | 1,433 | 331 |